சட்ட அமைதிக்குக் கூட பங்கம் விளையக்கூடிய நிலைமைகள் உருவாகின்றன. அதுபற்றி கடுமையான நடவடிக்கைகளை எடுத்தால் பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக அது வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது எந்த அனுமதியுமில்லாமல் திருட்டுத்தனமாக வெட்டுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். பெரிய அளவிலே மரங்களைக் கொண்டிருக்கின்ற அந்தக் கிராமப் பகுதிகளிலே அவர்கள் திருட்டுத்தனமாக வெட்டுகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாமல் நடக்காது. கிராம மக்கள் சம்பந்தப்பட்டுதான் நடந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட குறிப்பிட்ட புகார்கள் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர், அப்படி குறிப்பிட்ட புகார்கள் இருக்குமானால் உடனடியாக தெரிவிப்பார்களானால், அந்த நேரத்திலேயே தடுத்தி நிறுத்தி அதிலே சம்பந்தப்பட்டவர்கள் கடுமையான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே, பல பகுதிகளிலே புதிதாக நடப்பட்டிருக்கிற மரங்களும் கன்றுகளும் சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தினாலே பட்டுப் போய்விட்டன. ஆகவே, அவைகளையெல்லாம் சரியாக பராமரிக்கக்கூடிய முறையிலே கூடுதலாக பணியாளர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் மிகப் பெரிய அளவிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆகவே ஒவ்வொரு மரத்தையும் நேரிலேயே பாதுகாப்பது என்பது இயலாத காரியம். ஆனாலும் இப்போது அதற்காகவே ஆங்காங்கே கிராமங்களிலே உள்ள அந்த அந்த பகுதிகளைச் சேர்ந்த கிராம வனப் பாதுகாவலர் என்ற ஒரு பதவியை உருவாக்கி, அதிலே அவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட எல்லை வரை அவைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்றெல்லாம் ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்தப் பதவிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

மேட்டூரில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்

8—(* வினா எண். 18204) திரு செ. செம்மலை: மாண்புமிகு சட்டம்—தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம் மாவட்டம், மேட்டூரில் முதலாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சேலத்தில் தற்போது செயல்பட்டு வரும், இரண்டு குற்றவியல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில், ஒன்றை மேட்டூரில் மாற்றி அமைப்பதற்கான ஆணையை 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாளில் அரசு பிறப்பித்துள்ளது.

மேற்சொன்ன நீதிமன்றத்தை மேட்டூரில் அமைப்பதற்கு பொருத்தமான தனியார் கட்டிடம் இதுகாறும் கிடைக்கவில்லை என்று உயர்நீதி மன்றம் கூறியிருக்கிறது. எனவே அந்நீதிமன்றம் இன்னும் மேட்டூருக்கு மாற்றப்படவில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மேட்டூரில் துணை ஆட்சியர் அலுவலகம் இருந்த கட்டிடம் தற்போது காலியாக இருக்கிற சூழ்நிலையில் இருப்பதால் அந்தக்கட்டிடத்தில் இந்த நீதிமன்றத்தைத் துவங்குவதற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திற்கு 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16, 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் ஆகிய இரண்டு தேதிகளில் எழுதி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசு அறிவுறுத்தியது. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அண்மையில் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் அன்று அரசு எழுதி தக்க கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் ஒரு கட்டிடத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார். அது குறித்து உயர்நீதிமன்றத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தகவல் தெரிவித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாநில அளவில் வழக்கு நடத்தும் துறை (Department of Prosecutions) அமைக்கும் திட்டம்.

9-(*வினா எண். 19229) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டம்—தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் சார்பில் குற்றவியல் வழக்குகளை நடத்துவதற்கு மாநில அளவில் வழக்கு நடத்தும் துறை (Department of Prosecutions) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?